205

III

Total No. of Questions – 7

Total No. of Printed Pages – 3

Regd. No.

## Part – II

## TAMIL, Paper-II

**(Second Language)**

*Time : 3 Hours]* *[Max. Marks : 100*

**Instruction :** சரியான விடைகள் எழுதவும்

I. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக: **5 × 5 = 25**

1. இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்?

2. வினை மேற்சென்ற தலைவனிடம் தூதுவந்த பாணன் தெரிவித்த செய்தி யாது?

3. பொறையுடைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

4 கண்ணகியின் சூளுரையும் நகர் மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?

5. சீதையை அனுமன் கண்டுவந்து கூறிய செய்திகளை இருபது வரிகளில் மிகாது எழுதுக.

6. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள்?

7. சிக்கனம் என்னும் தலைப்பில் கவிஞர் சுரதா கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

8. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

II. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. $2 \times 3 = 6$

1. இசைத் தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத்தமிழ் நூல் வகைகள் யாவை?

2. பழந்தமிழ் மக்கள் மேற்கொண்ட தொழில்களைப் பற்றி எழுதுக?

3. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?

4. நீதி நூல்களின் பொதுவான இயல்பினைக் குறித்து எழுதுக.

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக. $4 \times 6 = 24$

1. தமிழ்-உயர்தனிச் செம்மொழி-இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

2. நம் தமிழ்மாந்தர் கடைப்பிடித்து ஒழுகிய ஒற்றுமை உணர்வும் ஈகையும் பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. தேர்தல் முறைகள் பற்றி மு.வ. எடுத்துரைக்கும் கருத்துக்கள் யாவை?

4. ஆன்மா, ஆத்மா – என்பன தூய தமிழ்ச் சொற்கள் என்று பாவானர் உரைவழி நிறுவுக.

5. நீதி கூறும் போதும் நயம்படக் கூறியவர் திருவள்ளுவர் என்பதனைச் சான்றுகளுடன் விளக்குக.

6. தமிழர்கள் பழங்காலந்தொட்டே பல கலைகளையும் பேணி வந்துள்ளனர் என்பதை விளக்குக.

IV. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக. $2 \times 5 = 10$

1. "நல்லது செய்த லாற்றி ராயினும்"
2. "தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டு கொல்"
3. 'கண்டனென் கற்பினுக்கு கணியைக் கண்களால்'
4. 'அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்'

V. எவையேனும் இரண்டிற்கு இரு பக்க அளவில் கட்டுரை வடிவில் விடை தருக. $2 \times 10 = 20$

1. சட்டை
2. மண்
3. மகன்
4. பால் வண்ணம் பிள்ளை
5. பழிக்குப்பழி

VI. ஏதேனும் ஒன்றிற்கு இருபக்க அளவில் கட்டுரை வடிவில் விடை எழுதுக. $1 \times 10 = 10$

1. தூய்மை இந்தியா திட்டம்
2. பெண்கல்வி
3. முகநூலும் அதன் பயன்பாடும்

VII. தமிழில் மொழி பெயர்க்க: $1 \times 5 = 5$

Schools do not stop with teaching the children the lessons alone. They do more. It is in the schools that the boys and girls form some regular habits. They learn to be have in an orderly way. They are corrected whenever they go wrong.

---